ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531



ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:




# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

**பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்**



நாள் :
8, பங்குனி 2026

Date:
22, மார்ச் 2026

வகுப்பு 30

www.vedaneri.org



அறத்துப்பால் - இல்லறவியல் - அதிகாரம் : 23

# ஈகை

## வறியவர்களுக்குக் கொடுத்தல்

- இல்லையென்று இரப்போருக்கு இல்லையென்று சொல்லாமலும் பதில் எதிர்பாராமலும் கொடுத்தல்.
- இது மறுமைப் பயன் உடையதாகலின் இம்மைப்பயனுடைய ஒப்புரவறிதலின் பின் வைக்கப்பட்டது.
- ஒப்புரவறிந்து செய்தலின் பயன் புகழ். ஈகையின் பயன் புண்ணியம்.

குறள்: 1 ஈகையின் இலக்கணம்

1. இல்லாதவர்க்கு பயன்கருதாது ஈவதே ஈகை

குறள்கள்: 2 - 7 ஈதலின் சிறப்பு

2. கொளல் தீது, ஈதலே நன்று.
3. இலன் என்று சொல்லாமை குலனுடையான் பண்பு
4. கொடுத்தல் இன்பமாகும்.
5. ஈதல் பண்பினால் தவத்தைவிட இல்வாழ்க்கை சிறந்தது.
6. செல்வத்தை மறுமைக்கும் சேமிக்க உதவும் இடம்
7. தீப்பிணி தீண்டாது.

குறள்கள்: 8 - 10 ஈயாமையின் குற்றம்

8. ஈத்துவக்கும் இன்பம் இழப்பர் ஈயார்.
9. இரத்தலை விட இன்னாதது ஈயாமை.
10. இயலாத நிலையை விட இறத்தல் இனியது.



## 1. வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.



வறுமையில் உள்ளவர்க்குத் தேவையான ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகையாகும். மற்றெல்லாம் குறிப்பான பின்வரும்பயன் கருதிக் கொடுக்கும் தன்மையதாகும்.

வறியார் = வறுமையில் உள்ளவர் - ஒரு பொருளும் இல்லாதவர்.
குறியெதிர்ப்பு நீர = குறித்த எதிர்ப்பு நீர்மை - குறிப்பான ஒரு எதிர்பார்ப்பைக் கொண்ட தன்மை

வறுமையில்லாதவர்க்கோ பயன்கருதியோ கொடுப்பது கொடையாகாது என்பது மற்றெல்லாம் என்பதால் குறிக்கப்பட்டது.

இல்லாதவர்க்கு பயன் கருதாமல் ஈவதே ஈகையாகும்.

இதனால் ஈகையினது இலக்கணம் சொல்லப்பட்டது.



## 2. நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று.

பிறர் கொடுப்பதை வாங்கிக் கொள்வது முக்தியுலகிற்கு நல்லவழியென்றாலும் (இலவசமாக) வாங்குதல் நல்லதல்ல. கொடுப்பவருக்கு முக்தியுலகம் இல்லையென்றாலும் கொடுப்பதே நல்லது.

நல்லஆறு = நல்லவழி - முக்திக்கான வழி
மேலுலகம் = முக்தி உலகம்
இல்லெனினும் = இல்லை என்றாலும்

எனினும் என்று சொல்லப்பட்டதால் அவ்வாறு இல்லை என்பது காட்டப்பட்டது.

ஈதலே எனும் பிரிநிலை ஏகாரத்தால் மற்ற எல்லா அறங்களிலும் ஈதல் சிறந்தது என்பது பெறப்பட்டது.

எது நல்லது என்று சொல்ல வந்தவர் உடன் எது தீயது என்பதும் கூறினார்.

கொளல் தீயது, ஈதல் எல்லா அறங்களிலும் சிறந்தது என்பது கருத்து.



## 3. இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல் குலனுடையான் கண்ணே உள.

யான் இல்லாதவன் என்னும் துன்பம் தரும் வார்த்தைகளை பிறரிடம் சொல்லாமையும் அதனை தன்னிடத்துச் சொன்னவர்க்கு இல்லையென்று சொல்லாமல் கொடுப்பதும் நற்குடியில் பிறந்தவனிடத்திலே உள்ளன.

இலன் = இல்லாதவன் - வறியவன்
எவ்வம் = துன்பம் - இங்கு துன்பம் தரும் மொழிகளைக் குறிப்பதால் காரியவாகு பெயர்.
உரையாமை = சொல்லாமை
குலனுடையான் = நல்ல குலம் உடையவன்

யான் வறியவனென்று ஒருவன் கூறியதைப் பிறரிடம் கூறாமையும் அவ்வாறு தன்னிடம் கூறியவனுக்கு இல்லையென்று சொல்லாமல் கொடுத்தலும் நற்குடியில் பிறந்தவரின் குணங்கள் ஆகும்.

‘வறியவராக வந்தவர் இல்லையென்று சொல்லும்முன் ஈதல்’ எனவும், ‘இல்லையென்று இன்னொருவரிடம் சொல்லத் தேவையில்லாத அளவு ஈதல்’ எனவும் ‘யான் வறியவனென்று சொல்லாமையும் வறியவரென்று வந்தவர்க்கு இல்லையென்னாமல் ஈதலும்’ எனவும் பொருள் கொள்ளலாம்.

இல்லை என்ற துன்பம் தரும் சொல்லைச் சொல்லாமையும் ஈதலும் நற்குடிப்பிறந்தார் பண்பாகும்.

சென்ற குறளில் கூறப்பட்ட “கொளல் தீது” என்றதை விலக்குதலையும், “ஈதலே நன்று” என்றதைச் செய்தலையும் உறுதியாகக் கடைபிடிப்பவர் யார்? என்பது காட்டப்பட்டது.



# 4. இன்னாது இரக்கப் படுதல் இரந்தவர்
# இன்முகம் காணு மளவு.

கேட்டவரின் (பொருள் பெற்றதனால் மலரும்) இனிய முகத்தைக் காணுமளவும் கேட்கப்படுதலும் துன்பமாகும்.

இன்னாது = இன்னாதது - இன்பம் இல்லாதது = துன்பம்
இரக்கப்படுதல் = யாசிக்கப்படுதல் - வறியவரால் கேட்கப்படுதல்.
கேட்பவருக்குக் கேட்டதைக் கொடுப்பேன் என்றிருத்தல்.
இரப்பவர் = யாசிப்பவர்
இன்முகம் = இனிய முகம்

கேட்பவருக்கு பொருள் இல்லாமல் இருப்பது துன்பமாகும். கொடுப்பவருக்கு கொடுக்க இயலாமல் போய்விடுமோ என்ற அச்சம் துன்பமாகும்.

கேட்பவரின் துன்பம் பொருள் பெற்றவுடன் நீங்குகிறது. கொடுப்பவருக்கு பொருள் பெற்றவரின் நிறைவடைந்த இன்முகத்தைக் கண்டவுடன் (கொடுக்க இயலாமல் போகவில்லை என்ற நிறைவினால்) துன்பம் நீங்குகிறது.

யாசிப்பவருக்கு வேண்டுமளவும் கொடுத்தல் வேண்டும் என்பதும் அவ்வாறு கொடுப்பது கொடுப்பவருக்கு இன்பமாகும் என்பதும் பெறப்பட்டது.



## 5. ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை மாற்றுவார் ஆற்றலின் பின்.

தவவலிமையுடையவருக்கு வல்லமையாவது தமது பசியைப் பொறுத்தலாகும். அவ்வல்லமைதான் பொறுத்தக்கரிய அந்தப் பசியை ஈதலினால் நீக்குபவரது வல்லமைக்குப் பிற்பட்டதாகும்.

ஆற்றுவார் = தவம் செய்யும் துறவியர்
ஆற்றல் = வல்லமை
மாற்றுவார் = போக்குவார்

தமது பசியையும் பிறரது பசியையும் தீர்க்கமாட்டாத தவம் இருக்கும் துறவியின் வல்லமையைவிட, தமது பசியையும் பிறரது பசியையும் தீர்ப்பவராகிய இல்லறத்தாரது வல்லமை மேலானதாகும்.

தன்பசி பொறுக்கும் துறவியின் தவவலிமையைவிட பிறர் பசி தீர்க்கும் இவ்வாழ்வானின் ஈகை மேம்பட்டது என்பது கருத்தாகும்.



# 6. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன் பெற்றான் பொருள்வைப் புழி.



பொருள் ஒன்றுமின்றி வறுமையில் இருப்பவரின் அனைத்தையும் அழிக்கும் பசியைப் போக்குதல் எனும் அறம், பொருள் நிறையப் பெற்றிருக்கும் ஒருவன் தன் பொருளை வைத்துப் பாதுகாக்கும் இடமாகும்.

அற்றார் = பொருள் அற்றார் - வறியவர்
அழிபசி = அனைத்தையும் அழிக்கும் பசி
பொருள் வைப்புழி = பொருளை வைக்க உதவும் இடம்

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவமுயற்சி தாளாண்மை - தேனின்
கசி வந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப்பறந்து போம்.

அழியும் பொருளைப் பத்திரமாக வைக்கும் இடம் வறியவரிடம் கொடுத்து விடுவதே ஆகும்.

வறியவரின் அரியபசியை போக்குதற்கு செலவழித்த பொருள், புண்ணியமாகிப் பின்னர் பயன் வடிவாகத் தனக்கே வந்துதவும் என்பதாகும்.

அறத்திற்குப் பயன்படும் பொருள் புண்ணியமாக செய்பவர்க்கே வந்து சேரும் என்பது கருத்து.

# 7. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும் தீப்பிணி தீண்டல் அரிது.

எப்போதும் பங்கிட்டு உண்ணும் பழக்கமுடையவனை பசி என்னும் தீயநோய் வந்து சேருதல் இல்லை.

பாத்தூண் = பகுத்து உண்ணுதல்
மரீஇயவன் = பழகியவன்
தீப்பிணி = தீய நோய்.

பசி எனும் நோய் இவ்வுடம்பிலிருந்து அறிவையும் ஆசாரத்தையும் அழித்து, பின்வரும் உடம்புகளுக்கும் துன்பம் செய்வதால் தீப்பிணி என்றார்.

இவை ஆறுபாட்டாலும் ஈதலின் சிறப்புக் கூறப்பட்டது.



## 8. ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை வைத்திழக்கும் வன்க ணவர்.

தம்முடைய பொருளை பிறருக்குக் கொடுக்காமல் வைத்திருந்து பின்னே இழந்துவிடும் அருளில்லாதவர், வறியவர்க்குக் கொடுப்பதனால் உண்டாகும் இன்பத்தை அறியாதவரோ !

தாம் உடைமை = தம்முடைய பொருள்.
வைத்து இழத்தல் = பிறருக்குக் கொடாமல் தாமே வைத்திருந்து கள்வர் முதலானவர்களால் இழத்தல் - புண்ணியத்திற்குப் பயன்படாமல் வீணாகப் போதல்.
வன்கணவர் = வன்கண்ணர் = கொடியவர் = அருளில்லாதவர்.

வறியவர்க்குக் கொடுப்பதால் அவ்வறியவர் இன்பம் அடைகிறார். அதைக் காணும் கொடுப்பவருக்கும் இன்பம் உண்டாகிறது. இவ்வாறு பிறர் இன்பமடைவதைக் கண்டு தாம் இன்பமடையும் அருளுடைமையை அறிந்தால் கொடியவரும் கொடுத்து இன்பம் அடைவதல்லாமல் வைத்து இழக்கமாட்டார் என்பது கருத்து.

ஈவதனால் உண்டாகும் இன்பத்தை ஈயாதவர் அறியார்.



## 9. இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய தாமே தமியர் உணல்.

தம்மிடமுள்ள பொருளின் குறைவை நிறைக்க விரும்பி பிறருக்குக் கொடாமல் தாம் மட்டுமே தனியாக அனுபவித்தல் ஒருவருக்கு நிச்சயமாக பிறனிடம் சென்று யாசித்தலைவிடத் துன்பமானதாகும்.

இன்னாது = துன்பமானது
மன்ற = நிச்சயமாக
நிரப்பிய = நிரப்ப வேண்டி அல்லது சேர்த்து நிரப்பிய பொருளை
தமியர் உணல் = தனித்து உண்ணல்.

ஒருவன் தம்மிடமுள்ள பொருளில் நிறைவடையாமல் மேலும் சேர்த்து நிரப்ப வேண்டும் என்றும் கொடுத்தால் குறைந்துவிடும் என்றும் கருதித் தான் மட்டுமே தமது பொருளை அனுபவித்தால் இழிவும் வறுமையும் உண்டாகும்.

இரத்தலால் இரப்பவருக்கு அப்போதைக்கு இழிவு மட்டும் உண்டாகும், பின் விளைவுகள் இல்லை. லோபத்தினால் கொடுக்காதவனுக்கு இகழ் ஏற்படுவதோடு பின்னர் வறுமையும் வந்துசேரும் என்பதால் இரத்தலைவிட இன்னாதது என்றார்.

பொருள் இருந்தும் கொடுக்காதவனுக்கு பொருள் இல்லாது யாசிப்பவன் அடையும் துன்பத்தைவிட பெருந்துன்பம் உண்டாகும்.

## 10. சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
## ஈதல் இயையாக் கடை.



ஒருவனுக்கு இறந்துபோதல் போலத் துன்பம் செய்வது ஒன்றுமில்லை. அத்தகைய இறத்தலும் வறியவர்க்கு ஒன்றைக் கொடுக்க இயலாதபோது இன்பம் தருவதாகும்.

சாதலின் = சாதலைவிட
அதூஉம் = அதுவும் - இறப்பதும்
இனிது = இனியது - இன்பமானது
இயையாக் கடை - முடியாதபோது

பிறருக்கு உதவாத வாழ்க்கை பயனற்றது. கொடுத்துப் பழகியவனுக்கு கொடுக்க இயலாத நிலை மரணத்தைவிடத் துன்பமானதாகும்.

பிறர்க்குப் பயன்படாத உடற்சுமை நீங்குவதால் இனிது என்றார்.

ஈய இயலாத நிலையைவிட மரணம் இன்பமானது.

இவை மூன்றுபாட்டாலும் ஈயாமையின் குற்றம் சொல்லப்பட்டது.



ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி

வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்

உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே

வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)



1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Instagram - swami om karananda

3. Facebook - Swami omkarananda

4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam


94430 51910

www.vedaneri.org

vedapuricamps@gmail.com